பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

10 09 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 15வது குடியரசு துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. குடியரசு துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாம், நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. அஇஅதிமுக மீண்டும் ஆட்சியமைத்தால் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறைவேற்றப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கோயம்புத்தூர், திண்டுக்கல், செங்கல்பட்டு உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 15வது குடியரசு துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பொது வாழக்கையில் பல ஆண்டுகளாக அனுபவம் பெற்றுள்ள திரு. ராதாகிருஷ்ணன் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பார் என்று தெரிவித்து அவருக்கு வாழ்த்து கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், திரு. ராதாகிருஷ்ணன் தமது வாழ்க்கையில் என்றும் சமூகத்திற்காகவும், ஏழை மற்றும் விளிம்பு நிலை மக்களின் அதிகாரமளித்தலுக்காவும் சேவையாற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அவர் சிறந்த குடியரசு துணைத்தலைவராக திகழ்ந்து நாட்டின் அரசியல் சாசன மதிப்புகளை வலுப்படுத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளை மேம்படுத்துவார் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அரசியலமைப்புச் சட்டத்தின் வழி நின்றும், நமது நாட்டின் மக்களாட்சி கருத்தியல்களின் வழி நின்றும் அவர் தமது கடமைகளை ஆற்றுவார் என்று நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டின் சாதாரண சேவகராக தனது பொது வாழ்வை தொடங்கிய திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிஜேபியின் பொறுப்பு மிக்க தலைவராகவும், மக்களவை உறுப்பினராகவும் திறம்பட செயல்பட்டார் என்று கூறியுள்ளார்.

தாம் ஆற்றிய கடமைகளுக்கும், சேவைகளுக்கும் சான்றாக நாட்டின் முக்கியப் பொறுப்பான குடியரசு துணைத்தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வென்று டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

அவரது வெற்றி தமிழகத்திற்கு கிடைத்த பெருமை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா உள்ளிட்டோர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அவரது வெற்றியை மாநிலம் முழுவதும் பிஜேபி நிர்வாகிகள் கொண்டாடியதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமது இந்த வெற்றி ஒவ்வொரு இந்தியரின் வெற்றி என்றும், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக திகழச் செய்ய நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காக தாம் பாடுபடுவேன் என்றும், ஜனநாயகத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டும் முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று நடைபெற்ற குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிட்ட திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், 152 வாக்குகள் வித்தியாசத்தில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி வேட்பாளர் திரு. B. சுதர்ஷன் ரெட்டியை வென்றார்.

வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தேர்தல் அதிகாரி திரு. P.C. மோடி, மொத்தமுள்ள 781 வாக்குகளில் 767 வாக்குகள் பதிவானதாக தெரிவித்தார்.

இதில் 15 வாக்குகள் செல்லாதவை என்று அவர் கூறினார்.

திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு 452 வாக்குகளும், திரு. பி. சுதர்ஷன் ரெட்டிக்கு 300 வாக்குகளும் கிடைத்ததாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் திருப்பூரில் பிறந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், 1998 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் கோயம்புத்தூர் தொகுதியில் இருந்து பிஜேபி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு தமிழக பிஜேபி தலைவராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

ஜார்கண்ட், தெலங்கானா, மகாராஷ்டிரா மாநிலங்களின் ஆளுநராகவும், புதுச்சேரி யூனியன்பிரதேச துணைநிலை ஆளுநராகவும் திரு. ராதாகிருஷ்ணன் பணியாற்றியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் உள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக குழு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளது.

இந்த ஆலையின் அரவைக்கு போதுமான கரும்பு இல்லாத காரணத்தாலும், அடிக்கடி ஏற்பட்ட இயந்திரங்களின் கோளாறு காரணமாகவும் கடந்த 2023-24ஆம் ஆண்டு அரவைப் பருவம் முதல் இந்த ஆலை இயங்காமல் இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்த அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்க வேண்டும் என்று அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மாநில அரசிடம் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து சர்க்கரைத்துறை இயக்குநர் தலைமையில் 10 உறுப்பினர்களைக் கொண்ட வல்லுநர் குழுவை அமைக்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக மீண்டும் ஆட்சியமைத்தால் அத்திக்கடவு அவினாசி திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறைவேற்றப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் தடையின்றி அனைவருக்கும் குடிநீர் கிடைக்கும் என்று குறிப்பிட்டார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்காக குடிமராமத்து திட்டம் கொண்டுவரப்பட்டதாகவும், அதன் மூலம் நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு நீர் தேக்கப்பட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், தேனி, மதுரை, தருமபுரி, திருச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு, ஈரோடு, கள்ளக்குறிச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹமாஸ் தலைவர்களை குறிவைத்து கத்தார் தலைநகர் தோஹா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

-----------

நேபாளத்தில் அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது வன்முறை நிகழ்ந்ததையடுத்து மக்கள் அமைதி காக்குமாறு அந்நாட்டு ராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.

-----------

சிறையில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்த 48 பாகிஸ்தான் மீனவர்கள் மற்றும் 19 பாகிஸ்தானியர்களை இந்தியா அந்நாட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளது.

-----------

மழை வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு-கஷ்மீருக்கு மகாராஷ்டிர அரசு சார்பாக 5 கோடி ரூபாய் நிவாரண நிதி அளிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

-----------

தமிழகத்தில் எஸ்.சி. சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக தொண்டாற்றியவர்களுக்கு வழங்கப்படும் டாக்டர் அம்பேத்கர் விருதுக்காக விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

-----------

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஒரு கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் பயன்பாட்டினை அமைச்சர்கள் திரு. மா. சுப்பிரமணியன், திரு. சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

-----------

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. பிரதாப் ஆய்வு செய்தார்.

-----------

திருவண்ணாமலையில் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் பயன்கள் குறித்து இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-----------

கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள அய்யர்மலை அருள்மிகு ரத்னகிரீஸ்வரர் கோயிலில் ரோப்கார் சேவை பக்தர்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

-----------

இசையமைப்பாளர் திரு. இளையாராஜாவின் 50 ஆண்டுகால இசைத்துறை சேவையைப் போற்றும் வகையில் தமிழக அரசின் சார்பில் இம்மாதம் 13ஆம் தேதியன்று சென்னையில் பாராட்டு விழா நடைபெறும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்சை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

அபுதாபியில் நேற்று தொடங்கிய முதல் ஆட்டத்தில் ஆஃப்கனிஸ்தான் 94 ரன் வித்தியாசத்தில் ஹாங்காங்கை வென்றது.

முதலில் பேட் செய்த ஆஃப்கனிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 188 ரன் எடுத்தது.

189 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹாங்காங், 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 94 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

--------------

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 48 கிலோ எடைப் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர், 5-0 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் Wang Qiuping-ஐ வென்றார்.

-------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ் கருணாகரன் - ஆதியா வரியத் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 21-12, 21-11 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய இணையான இஷான் பட்நாகர் - ஆராதனா பாலசந்திரா இணையை வென்றது.

-------------

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 2.15க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>